கும்பகோண சந்தையின் தினசரி விலை நிலவரத்தின் வெற்றிக்கதை:

**ஆர்.சிவக்குமார்,**
**த/பெ. ராஜகோபால், மேற்கு வீதி, வலப்பகுடி,**
**திருகாட்டுப்பள்ளிவட்டம், தஞ்சாவூர் மாவட்டம்,**
**பின்கோடு - 613104**
**அலைபேசி: 9659882975.**



---

விவசாய உற்பத்தி பொருட்களில் குறிப்பாக விரைவில் அழுகக்கூடிய பொருட்களான தோட்டக்களை பொருட்கள் (காய்கறிகள், பழங்கள், பூக்கள், மற்றும் வாசனைப் பொருட்கள்) சிறு மற்றும் குறு விவசாயிகளின் வாழ்வியல் ஆதாரங்களாக உள்ளன. விவசாயிகள் குறைவாக வளங்களை கொண்டு விவசாய உற்பத்தியை மேற்கொள்வது என்பது பெரும் சிரமமாக உள்ளது. அந்தப் பொருட்களை வாபகரமாக விற்பனை செய்ய முடிவதில்லை. பெரும்பாலான சமயங்களில் நாங்கள் அருகில் உள்ள சந்தைகளில் விற்றுவிடுகிறோம். அல்லது எங்களுக்கு தேவையான நேரத்தில் சிறு பண உதவி அளிக்கும் இடைத்தரகர்களிடம் விற்கிறோம். இதனால் காவிரி டெல்டா மாவட்ட சேர்ந்தவர்களுக்கு தற்பொழுதைய சந்தை முறைகளால் நிலையில்லாத வருமானமாக உள்ளது.

என் பெயர் சிவக்குமார் எனது ஊர் தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள திருகாட்டுப்பள்ளி அருகில் உள்ள வலப்பகுடி கிராமம். எனக்கு 5 ஏக்கர் நிலம் உள்ளது. இதில் இரண்டிலிருந்து மூன்று ஏக்கர் வரை தோட்டக்கலைப் பயிர்களான கத்தரி, வெண்டை, வெங்காயம் மற்றும் கீரைவகைகளை மேற்கொள்வேன். மற்ற நிலங்களில் நெல் பயிரிடுவேன். கடந்த 2008 - 09 ம் ஆண்டுகளில் நான் ஒரு ஏக்கரில் வெங்காயம் பயிரிட்டேன். இதில் தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழக தோட்டக்கலை துறையின் தொழில்நுட்பத்தை கையாண்டேன். இதில் உரமாக நான் 80 கிலோ யூரியா மற்றும் 40 கிலோ பொட்டாஷ் மற்றும் 38 கிலோ ஸ்கைவின் பயோ - டெக் தயாரிப்பான பேசியா

பயோ - குருணைகளையும், இரண்டு முறை சன்லின் @ 500 மிலி / ஏக்கர் பயிர் வளர்ச்சி பருவத்தில் தெளித்தேன்.

அறுவடையின் பொழுது மிக அதிக அளவிலான 7,700 கிலோ இதுவரை நான் எடுக்கமுடியாத விளைச்சல் கிடைத்தது. 50 கிலோ கொண்ட 154 பைகள் எடுக்க முடிந்தது.

விற்பனையின் பொழுது நான் ஒரு முறை நான் தினதந்தி நாளிதல் 25.08.2009 அன்று வந்த செய்தியினைக் கண்டேன். அதில் சந்தை விவரங்களை தரும் வேளாண் பல்கலைக்கழக இணைய தளம் பற்றியும் குறுந்தகவல்கள் பற்றிய விவரங்களையும் கண்டேன். அது முதல் எனது அண்டை வீட்டுக்காரரின் கணியை பயன்படுத்தி தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழக இணைய தளம் மூலம் ஏறக்குறைய எல்லா நாட்களிலும் அனைத்து காய்கறிகள் வெங்காயம் உள்ளிட்டவைகளின் சந்தை நிலவரங்களை தெரிந்து கொண்டேன். குறிப்பாக நான் இரண்டு சந்தைகளின் நிலவரங்களை கவனித்தேன். திருச்சி மற்றும் கும்பகோணம் சந்தைகளை கவனித்து அதை அலைபேசியின் மூலம் மொத்த வியாபாரியை தொடர்பு கொண்டு செப்டம்பர் 2009ல் கும்பகோணம் சந்தையில் 50 கிலோ பையை ரூ.800 என்ற அளவிற்கு விற்றேன்.

இதன் மூலம் 7,700 கிலோ வெங்காயத்தை விற்றதின் மூலம் ரூ. 1,23,000/- ரூபாய் எனக்கு ஒரு ஏக்கரில் இருந்து கிடைத்துள்ளது. இதற்கு கோவை வேளாண்மை கல்லூரியின் விரிவாக்கத்துறை இயக்குனராகத்தின் விழிப்புணர்வே காரணம்.

எனது இந்த வெற்றியின் மூலம் எனது கிராமத்தில் உள்ள விவசாயிகளும் அருகில் உள்ள காய்கறி சந்தைகளின் மொத்த வியாபாரிகளை தொடர்புகொள்ள ஆரம்பித்ததுடன் தங்களது அலைபேசி எண்களை தமிழ்நாடு வேளாண்மை கல்லூரியின் அலைபேசியின் வழியே குறுந்தகவல் சேவைக்காக பதிவு செய்து உள்ளார்கள்.

இதன்மூலம் எனது உண்மையான மற்றும் இதயம் கனிந்த நன்றிகளை தினசரி சந்தை நிலவர (DMI) சேவையின் மூலம் ஒவ்வொரு நிமிடமும் விவசாயின் நலனுக்காக சந்தை தகவல்களை அளிக்கும் தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்திற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

இடம்: வழப்பகுடி

நாள்: 30.09.2009

இப்படிக்கு

R. Sivakumar

(ஆர்.சிவகுமார்)